
www.tamilarangam.net

# சிந்தனை

ஆனி '86



வரலாற்றில் ஒரு "அடோல்ப் கிட்லரும், பொல்பொட்டும்" தோன்றுவதற்குக் காரணம், மக்கள் அரசியல் விழிப்புடன் செயல்படத் தவறியதேயாகும்.

NO. 2/86

SINTHANAI

அன்பளிப்பு 3.50 D.M.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## சுகுமாரின் ஒரு கவிதை.

தோழரே
துப்பாக்கியை உயர்த்தும்.
வலது தோளில்
உதைப்பை வாங்க ஏதுவாக
நடுவில் உள்ள

கோட்டிடை வெளியில்
நேரே, நேராக மட்டுந்தான்
பாரும்.
எதிரிதானே அது?
வலது ஆள்காட்டிவிரலைப் பின்னோக்கி இழும்.
சரியாகக் குறிபார்த்தால்
ஒரேகுண்டே போதும் தோழரே.

சமயத்தில்
எதிரி கிடைக்காவிட்டால்
ஊரில் மனிதர்களும்,
மின்சாரக் கம்பங்களும் உண்டு.

அதுவும் கிடையாத போது
நெறி பிறழாத ஒரு தோழனை.......

துப்பாக்கி சூடாறக் கூடாது பாரும்.
நியாயப்படுத்த தலைமைப்பீடமும்
பிரசுரம் அடிக்க வெளியீட்டுப் பிரிவும்
உள்ளன தோழரே.

விடுதலைப் பாதையில்
வீர நடை போடும்.

— [illegible].

www.tamilarangam.net




# சிந்தனை



## ஆசிரியர் கருத்து

தாங்கமுடியாத ஒடுக்குமுறைகளையும் அழிவுகளையும் சந்தித்துக்கொண்டிருக்கும் ஈழத் தமிழ் மக்கள் தம் அரசியல் வரலாற்றில் மீண்டும் ஒரு திருப்பு முனைக்கு வந்து கொண்டு இருக்கின்றார்கள். இந்தச்சந்தர்ப்பத்திலும் கடந்தகாலங்களில் ஏற்பட்டது போல தவறுகள் நிகழாவண்ணமாகச் சிந்திக்க

கடந்த
மை 'ஈழம்'
ரமாநந்த
நாட்டு
டார்கள்,
ட்டார்கள்

சிந்தனையின் சென்ற இதழின் "ஆசிரியர் தலையங்கத்தின்" மை உலருவதற்கு முன்னரே அதை நிரூபிக்கும் விடயங்கள் நடைபெற்றுவிட்டன." இந்த சந்தர்ப்பத்தில் அதன் ஒரு பகுதியை மீண்டும் பிரசுரிக்கின்றோம்.

"....... சக இயக்கத் தோழர்களுக்கும் மற்றவர்களுக்கும் மரணதண்டனை விதிப்பதற்கு தளத்தலைமைகளும் அதை நியாயப்படுத்துவதற்கு இயக்கத் தலைமைகளும் இருக்கின்றன. தம் இயக்கங்களுக்குள்ளேயே உட்கட்சி ஜனநாயகத்தையும் சக தோழர்களையும் குழிதோண்டிப் புதைக்கும் தலைமைகளிடம் இருந்து எந்தவிதமான ஜனநாயகத்தை சாதாரண தமிழ் மக்கள் எதிர்பார்க்க முடியும். அரசபடைகளுக்குப் பயந்து ஒளிந்த காலம் போய் இன்று சக "தோழர்"களுக்கு பயந்து வாழும் நிலை பல போராளிகளுக்கு ஏற்பட்டுவிட்டது.

இவற்றிற்கான அடிப்படைக் காரணம் என்ன?

முறையான அரசியல் தயாரிப்பும் மக்கள் மீது நம்பிக்கையும் கொண்ட அமைப்புக்களை ஏற்படுத்தி அவற்றின் வழிகாட்டலில் மக்கள் பங்குகொண்டு செயலாற்றக் கூடிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெகுஜன இயக்கங்களுக்கூடாக மக்களைத்தயாரப்படுத்தி ஈழவிடுதலைப்போராட்டத்தை ஒரு மக்கள் போராட்டமா-க முன்னெடுக்காமல் ஆயுதத்திற்கு முதல் இடம் கொடு-த்த அரசியல் சித்தாந்தத்திற்குப் பதிலாக வீரசாகசச் செயல்களைச் செய்து மக்களைக் கவர்ந்து, பின் ஆயுதம் தாங்கிய சில கவர்ச்சிகரமான தளபதிகளே மக்களை விடுவிப்பார்கள் என்ற மாயையை மக்கள் மனத்தில் பதிய வைத்து மக்களை என்றென்றைக்குமாக போராட்ட அரங்கிலிருந்து அன்னியப்படுத்தி ஆயுதம் தாங்கியவர்களே மக்களின் எஜமானர்கள் என்ற நிலமைகளை உருவாக்கியதே இதற்குக் காரணமாகும்.

வெகுஜனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் அமைப்புக்களுக்குப் பதிலாக ஆயுதம் தாங்கிய குழுக்கள் மக்கள் மீது அதிகாரம் செலுத்துகின்றன. மக்கள் சுதந்தி-ரமாக தீர்மானங்கள் எடுத்து தம் பிரச்சனைகளை தாமே தீர்ப்பதற்கு உதவியாக இருப்பதற்குப் பதிலாக அவர்களுக்கு ஆணையிடும் புதிய ( முதலாளித்துவக் கோட்-பாடுகளுடன் கூடிய ) இராணுவமாக சில போராளிகள் செயல்படுகின்றனர். ஒரு முதலாளித்துவப் பொலிஸ், ராணுவம், மற்றும் விதானை செய்யும் தொழில்களை அவர்களைப்பார்க்கிலும் கொடூரமான முறையில் ( மரண தண்டனை விதிப்பது உட்பட ) செயல்ப்படுத்து இவர்கள் பின்நிற்பதில்லை. பாட்டாளிவர்க்க இராணுவத்திற்கும் முதாலாளித்துவ ராணுவத்திற்கும் இடையில் உள்ள வேறு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாடுகளை அறியக்கூடிய சந்தர்ப்பங்கள் இவர்களுக்குக் கிட்டாமல் இருந்திருக்கலாம் ஆனால் மனித உணர்வுகளை மதிக்கக்கூடத் தெரியாமல் போய்விட்டதா?

ஈழத்தில் ஒரு ஜனநாயகக்குடியரசைக் கட்டியெழுப்ப முயற்சிக்கும் இந்தத் தலைமைகள் இன்று இயக்கங்களுக்குள்ளும் சக இயக்கங்களுக்கிடையிலும் மக்கள் மத்தியிலும் தனி மனித சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் கடைப்பிடிக்கத் தவறும் போது, ஆட்சிக் கட்டில் ஏறியபின், அதிகாரம் கைக்கு வந்த பின் பின்கூவியலின் மேல் கம்போசியாவில் ஆட்சி செய்த "பொல் பொட்டின் " ஆட்சியையா ஏற்படுத்தப் போகின்றார்கள்?

"தமிழீழத்தின் இறமையானது யாருக்கும் தாரைவார்த்துக் கொடுக்கப்படவில்லை"-- ஆம், எந்த ஒரு இயக்கத்திற்கோ அன்றில் அதன் தலைவருக்கோ அவ்விறமை தாரைவார்த்துக் கொடுக்கப்படவில்லை. மக்களுக்காக இயக்கங்களேயன்றி இயக்கங்களுக்காக மக்களில்லை.

தமிழ் மக்கள் சீராகச் சிந்தித்து வருங்கால வரலாற்றை உருவாக்குவதில் பங்கு கொள்ள வேண்டும். வராலாற்றில் ஒரு "அடோல்ப் கிட்லரும் பொல்பொட்டும்" தோன்றுவதற்குக் காரணம் மக்கள் அரசியல் விழிப்புடன் செயல்படத் தவறியதேயாகும். அந்த நிலை ஈழத் தமிழருக்கும் ஏற்பட்டுவிடக்கூடாது.

---



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நான்
# தண்டனை
# கோருகிறேன்

நான்
அழுவதற்கு வரவில்லை - அவர்கள்
விழுந்த இடத்தில்
இன்னும்
உயிரோடு இருப்பவர்களே!
உங்களிடம் பேசத்தான்...
உங்களை நோக்கியும்
என்னை நோக்கியும்
நான்
வேண்டுவது இதுதான்...
இறந்து கிடக்கும்
நம்மவர்கள் போரால
கேட்கிறேன்...
தண்டனை அளியுங்கள்!

நமது
தந்தையர் நாட்டு மண்மீது
சிவப்பு ரத்தத்தை
சிதற வைத்தவர்களுக்கு
தண்டனை அளியுங்கள்!

யாருடைய
ஆணையின் பேரில் இந்த
அக்கிரமங்கள் நடந்தனவோ
அந்த துரோகிகளுக்கு
தண்டனை அளியுங்கள்!

இந்த சவங்களின்மீது
சிம்மாசனம் ஏறிய
அந்த துரோகிகளுக்கு
தண்டனை அளியுங்கள்!

மறப்பவர்களுக்கும்
இந்தக் கொடுமைகளை
மன்னிக்கச் சொல்பவர்களுக்கும்
தண்டனை கொடுங்கள்!

நான்
எல்லோருடனும்
கைகுலுக்க விரும்பவில்லை
ரத்தக்கறை படிந்த
கரங்களைத்
தொடுவதற்கே விரும்பவில்லை
நான்
தண்டனை கோருகின்றேன்......!

தூர தேசங்களுக்கு
அவர்களை
தூதுவராய் அனுப்புவதை
அமைதி வரும்வரை
அவர்களை
அறைகளில் அடைப்பதை
நான்
அடியோடு விரும்பவில்லை.

இங்கேயே...
இப்பொழுதே...
திறந்த வெளியிலே
நீதி வழங்குங்கள்!
அவர்களுக்குரிய தண்டனையை
என்
கண் முன்னே
நிறைவேற்றுங்கள்...!

— பாப்லோ நெருடா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிந்தனை



## ஆசிரியர் கருத்து

உலகத் தொழிலாளர்களும் ஒடுக்கப்பட்ட மக்களும் ஒன்றுபட்டுக் கொண்டாடும் மே தினத்திற்கான ஆயத்தங்கள் நடந்து கொண்டிருந்த ஏப்பிரல் '86 கடைசி வாரத்தில் தொழிலாள வர்க்கத்தினதும் ஒடுக்கப்பட்ட மக்களினதும் பரம எதிரியான பாசிசத்தின் புதிய பரம்பரை ஒன்று ஈழத்தில் வெறியாட்டம் நடத்திக் கொண்டிருந்தது.

இந்த வாரத்தில் தமிழீழவிடுதலை இயக்கத்தைச் சேர்ந்த 200க்கும் அதிகமான போராளிகளும் 100க்கும் அதிகமான பொது மக்களும் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். தமிழ் மக்களின் விடுதலைக்காக தன்னை அர்ப்பணித்து, ஈழத் தேசிய விடுதலை முன்னணி மூலமாக தமிழ மக்களின் ஐக்கியத்தைக் கட்டி எழுப்பி விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்ற தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் தோழர் சிறி சபாரத்தினம் கோரமாகச் சுட்டுக் கொல்லப்பட்டார். விடுதலைப் போராளிகளின் முகாம்கள் தேடி அழிக்கப்பட்டன. சிறி லங்கா அரசின் போராளிகளிற்கு எதிரான நடவடிக்கையான " Search & Destroy " என்ற கட்டளையை செவ்வனே நிறைவேற்றினார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அன்று 1984 ஏப்பிரலில் சிறி லங்கா அரசின் கூலிப்பட்டாளங்கள் தமிழர்களைக் கொலை செய்து யாழ் நகர் வீதியோரங்களில் தீயிட்டுக் கொழுத்தினர்கள். கருகிய தமிழர்களின் சடலங்கள் சிறி லங்கா அரசின் பயங்கரவாதத்தை உலகிற்குப் பறைசாற்றியது. இன்று 1986 ஏப்பிரலிலும் தமிழ்ப் போராளிகள் கொலை செய்யப் பட்டு யாழ்நகர் வீதியோரங்களில் எரிக்கப்பட்டனர். வீடுகள் எரிக்கப்பட்டன.. 14 வயதிற்குக் குறைந்த பாலகர்களும் கொல்லப் பட்டார்களாம். இதைச் செய்தவர்கள் கூலிப்பட்டாளங்கள் அல்ல, தமிழீழத்தின் காவலர்கள் எனத் தம்மை அழைத்துக் கொண்ட சதிகாரர்கள்தான்.

இந்தத் தேசத் துரோகச் செயல்களுக்கு அவர்கள் கூறும் காரணங்களை மனிதாபிமானமுள்ள எவரும் ஏற்றுக் கொள்ள முடியாது. இந்தக் காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கைகளை நியாயப்படுத்த அவர்கள் கூறும் காரணங்கள், ஒன்றுக்கொன்று முரணாக இருப்பதே, அவர்கள் கூறும் காரணங்கள் உண்மையை மறைக்கும் பொய்ச் சாட்டுக்கள் என்பதை நிரூபிக்கின்றன.

தமிழீழ விடுதலை இயக்கத்தினர் விடுதலைப் புலிகளின் போராளிகளைக் கடத்தினர் என்பது ஒரு காரணமாகும். இது இயக்கங்களுக்கிடையிற் பேசித் தீர்த்துக் கொள்ளக்கூடிய ஒரு விடயமாகும். ஆனால் எந்தவிதப் பேச்சு வார்த்தைகளிலும் ஈடுபடாமலே முகாம்களை சமகாலத்தில் அழிக்கவும் தலைவரைக் கொல்லவும் கட்டளைகள் பிறப்பிக்கப் பட்டன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழீழ விடுதலை இயக்கத்தினர் கொள்ளைகளிலும் மற்றும் அடா -வடித்தனங்களிலும் ஈடுபட்டனர் என்பது மற்றுமொரு காரணம். இந்தக் காரணத்தைப் புலி இயக்கத்தினர் எப்பிரல் 29ஆம் திகதிக்குமுன் பகிரங்கமாக எங்கும் அறிவிக்கவில்லை. கடந்த பல வாரங்களாக நடைபெற்ற நான்கு இயக்கக்கூட்டின் கூட்டங்களை புலி இயக்கத்தின் தலைவர் பகிஷ்கரித்துள்ளார். அக்கூட்டங்களில் இக் குற்றச் சாட்டுக்களை பகிரங்கமாகச் சுமத்தியிருக்கலாம். களத்திலே நடைபெற்றவைகளை "களத்திலே" பகிரங்கமாக வெளியிட்டிருக்கலாம். ஆனால் இவை எதுவும் நடைபெறவில்லை. குற்றக் கணக்கானவர்களுக்கு மரணதண்டனை அளித்து விட்டு குற்றப் பத்திரிகை படிக்கும் வழக்கம் காட்டுமிராண்டிகளிடம் கூட இல்லை. மக்களின் நிர்ப்பந்தத்தின் பேரில் தமிழீழ விடுதலை இயக்கத்தைத் தடைசெய்தோம், தண்டனை அளித்தோம் என்பது இன்னுமொரு காரணம். மக்களைத் துப்பாக்கி முனையில் வீடுகளில் அடைத்துவிட்டு கொலை வெறியாட்டத்தை நடத்தியவர்களுக்கெதிராக மக்கள் நடத்திய மாபெரும் கதவடைப்பு ஒன்றே மக்கள் இவர்கள் மீது இன்று கொண்டிருக்கும் வெறுப்பை எடுத்துக் காட்டியது. மக்களின் பேரால் மரணதண்டனைகள் வழங்கும் இந்தத் தலைமைகள் மக்கள் மத்தியில் நடமாடத் தயங்குவதேன்?

தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் மக்களோடு மக்களாக வாழ்ந்து போராட்டத்தை முன்னெடுத்தார். ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர்கள் ஈழமக்கள் மத்தியில் பகிரங்க உரைகளாற்றி போராட்டத்தை முன்னெடுக்கின்றார்கள், ஆனால் இந்தத் தலைமைகள் ஈழமக்களுடன் பகிரங்கமாகக் கலந்துறவாடியது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எப்போதாவது உண்டா? அது போகட்டும் சென்னையில் பெரியார் திடலில் தமிழ்நாட்டு மக்கள் முன்னிலையில் தாம் மக்கள் ஆணையின் பேரில் செய்தவற்றை நியாயப்படுத்தியிருக்கலாம்.. இல்லை. இவை நடைபெறவில்லை.

இந்த நடவடிக்கைகளுக்கு அடிப்படையான காரணங்கள் உண்டு. ஈழப் போராட்டமானது ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைப் போராட்டமாக பரிணாமவளர்ச்சியடைந்து வருவது சகல பிற்போக்கு சக்திகளாலும் சகித்துக் கொள்ள முடியாததொன்றாகி விட்டது. இதனால் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் சக இயக்கங்களை அழித்து பிற்போக்கு சக்திகளால் அங்கீகரிக் -கப்படக் கூடிய தனி இயக்கம் ஒன்றை ராணுவ பலத்துடன் ஸ்தாபிப்பதே உண்மையான காரணமாகும்.

இறுதியாக தமிழ் மக்களாகிய நாம், எம் இருதயத்தைத்தொட்டு மனச்சாட்சிக்கு துரோகமிழைக்காது, கேட்கவேண்டும், "இந்தப் படுகொலைவாதிகளை நாம் நியாயப்படுத்த வேண்டுமா அல்லது அன்னியப்படுத்த வேண்டுமா?" என்பதுதான். ஒரேஒரு பதில்தான் இதற்கு உண்டு. புனிதமான விடுதலைப் போராட்டம் சகல ஒடுக்கப் பட்ட மக்களுக்காகவும் முன்னெடுக்கப்பட வேண்டுமானால் தேசத் துரோகிகளை அன்னியப்படுத்துவது தமிழ் மக்களின் கடமையாகும்.

1-6-86. ஆ.ரே.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஈழநாடு - 10-5-1986

# யாழ்ப்பாணத்தில் நேற்று அமைதியான ஹர்த்தால்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப்பகுதியில் நேற்று அமைதியானமுறையில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ். நகரில் உள்ள வர்த்தக ஸ்தாபனங்கள் பெரும்பாலும் மூடப்பட்டிருந்தன. பாடசாலைகள் நடைபெறவில்லை. வாகனப்போக்குவரத்துக்கள் மிகக்குறைவாகவே இருந்தன.

அரச, கூட்டுத்தாபனங்களில் ஊழியர்வரவு குறைவாகக் காணப்பட்டது ஆஸ்பத்திரிக்குநோயாளர் வருகை மிகவும் குறைவாகவே காணப்பட்டது.

யாழ். பெரியகடைமரக்கறிச் சந்தை, கொட்டடிமீன்சந்தை இறைச்சிக்கடை, சின்னக்கடைகள், மீன் சந்தை முதலியன மூடப்பட்டிருந்தன.

கல்லூரிகளுக்குக் குறைவான மாணவசகளே வந்திருந்தனர்அவர்களும்உடன்திரும்பி சென்றுவிட்டது.

நீதிமன்றத்திற்குச் சட்டத்தரணிகள், கட்சிக்காரர்கள் செல்லவில்லை. ஊழியரும் குறைவாகவே வந்திருந்தனர்.

மினிசினிமாக்கள் நடைபெறவில்லை தனியார் கல்வி நிலையங்களும் நடைபெறவில்லை.

வீதிகளில் மக்கள் நடமாட்டம் குறைவாக இருந்தது.

காலையில் வ.பி.போ ச. பஸ்கள் வந்து பஸ் நிலையத்தில் நின்றன மிகக்குறைவான பஸ்கள் மட்டும் சேவையில் ஈடுபட்டன. பிரயாணிகளும் குறைவாக இருந்தனர் மினி பஸ்கள் மிககுறைவாக சேவையில் ஈடுபட்டன. நண்பகலுக்குப் பின்னர் வீதிகள் வாகனப்போக்குவரத்தின்றி வெறிச்சோடிக் காணப்பட்டன.

கல்வியங்காடு சந்தை கூடவில்லை. கடைகள் திறக்கப்படவில்லை. நேற்றுமுன்தினமும் இச்சந்தையும் கடைகளும் மூடப்பட்டிருந்தன.

திருநெல்வேலிச் சந்தை நேற்று அதிகாலை வேளை வழமைபோல கூடுவதற்கான சூழ்நிலை இருந்த போதிலும் பின்னர் அங்கும் ஹர்ததால் அனுஷ்டிக்கப்பட்டது.

ஈழத்தேசிய விடுதலை முன்னணித் தலைவர்களில் ஒருவரும் தமிழ் ஈழவிடுதலை இயக்கத்தின் தலைவருமான ஸ்ரீ சபாரத்தினம் மற்றும் போராளிகள், பொதுமக்கள் மரணமடைந்ததற்கு அஞ்சலி செலுத்தும் முகமாக நேற்றுப் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு ஈழமக்கள்புரட்சிகர விடுதலை முன்னணி. [ஈ பி.ஆர். எல் எவ்] சுவரொட்டிகள் மூலம் பிரசாரங்கள் மூலமும் வேண்டுகோள் விடுத்திருந்ததை அடுத்து இந்த ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. [க-ஐ]



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஶ்ரீசபாவின் படத்துடன் நீண்டதூர ஊர்வலம்

[யாழ்ப்பாணம்]

"எங்கள் மண்ணில் சமாதானம் வேண்டும்; எங்கள் மண்ணில் ஐக்கியம் வேண்டும். ... போராளிகளிடையே இணக்கம் வேண்டும்"

மேற்கண்ட கோஷங்களை ஒலிபெருக்கியில் எழுப்பியவாறு மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் கோவில் முன்றலிலிருந்து நேற்றுக்காலை 9 மணிக்கு மாபெரும் ஊர்வலம் ஒன்று யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்டது.

ஈழ தேசிய விடுதலை முன்னணி உறுப்பினர்களில் ஒருவரும், தமிழீழ விடுதலை இயக்கத் தலைவருமான ஶ்ரீசபாரத்தினத்தின் பெரிய அளவிலான படமொன்றை ஏந்தியவாறு இவ்வூர்வலம் நடைபெற்றது

பிரேதப்பெட்டி ஒன்றும் இவ் ஊர்வலத்தில் எடுத்து வரப்பட்டது ஊர்வலத்தில் கலந்துகொண்டவர்கள் கைகளில் "சுதந்திரத்துக்காகப் போராடி சுதந்திரம் மறுக்கப்பட்ட மனிதனின் மரண ஊர்வலம்" என்றும் வேறு பல கோஷங்களடங்கிய சுலோக அட்டைகளையும் காணமுடிந்தது ஊர்வலத்தில் கலந்துகொண்டவர்கள் தமது வாய்களைக் கறுப்புத் துணியால் கட்டி இருந்தனர்

ஊர்வலம் மருதடிப் பிள்ளையார் கோவிலிலிருந்து ஆரம்பமாகி மானிப்பாய்வீதி வழியே வந்து சுழமலை வீதியூடாக தாவடிச் சந்தியை அடைந்து காங்கேசன்துறை வீதியூடாக யாழ் பஸ்நிலையத்தை அடைந்து யாழ் வண்ணை பெருமாள் கோவிலடியில் முற்றுப்பெற்றது.

சுமார் 7 மைல் தூரம் நடாத்தப்பெற்ற இந்த மௌன ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கான பெண்கள், வயோதிபர், சிறுவர்கள் கலந்து கொண்டனர். [ஐ]

**சிந்தனை**யில் வெளியாகும் கையெழுத்துடன் கூடிய ஆக்கங்களின் கருத்துக்கள் அவற்றை ஆக்கியோரின் சுதந்திரமான கருத்துக்களே.

ஆசிரியர் குழு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**டெலோ தலைவர் சிறிசபாரத்தினம்**
**தோற்றம் : 28-8-1952 மறைவு : 6-5-1986**

யாழ்ப்பாணத்திலுள்ளகல்லியங் காடு என்னுமிடத்திலே 28-8-1952 இல் சுந்தரம்பிள்ளைக்கும் ராஜலட்சுமிக்கும் மகனாகப் பிறந்த இவர் தனது இளமைக்கால படிப்பை யாழ் செங்குந்தா இந்துக் கல்லூரியில் மேற் கொண்டார். தனது 18 வது வயதில் படிப்பை இடைநிறுத்தி அரசியலில் புகுந்து சிறிலங்கா இனவெறியரசிற்கெதிரான நடவடிக்கைகளில் வேறு இளைஞர்களுடன் சேர்ந்து இறங்கினார்.

இதன் காரணமாக 10-2-1973இல் கைது செய்யப்பட்டார். 1974 ஜனவரியில் இந்தியாவில் கைது செய்யப்பட்டு கொண்டுவரப்பட்ட குட்டிமணியை நீர் கொழும்பு சிறையில் சந்தித்து நட்புப் பூண்டார், பின்னர் அநுராதபுரம் சிறைக்கு மாற்றப்பட்டு 1875 யூலையில் விடுவிக்கப்பட்டார், பின்னர் ஒருமாத இடைவெளியின் பின்பு மீண்டும் கைது செய்யப்பட்டு 1977 இன் முற்பகுதியில் விடுவிக்கப்பட்டனர்

1977 ஆகஸ்டு இனக்கலவரத்தைத் தொடர்ந்து வவுனியாவிலுள்ள நெடுங்கேணியில் டெலோ (TELO) ஆயுதப் பயிற்சி முகாமிற்குத் தலைமை தாங்கி நடத்தினார். இதன் மூலம் TELO இயக்க விஸ்தரிப்பிற்கு பெரிதும் பாடுபட்டார். இவருடன் தற்போதைய செயலதிபர் செல்வமும் கூட இருந்தார்,

www.tamilarangam.net

1981 மார்ச் இல் தங்கத்துரை, குட்டிமணி, பிரபாகரன் ஆகியோருடன் நீர்வேலி வங்கிப் பணம் அபகரிப்பில் ஈடுபட்டார். இச்சம்பவத்தில் தனது கைத் துப்பாக்கியில் குண்டுகள் தீர்ந்த நிலையில் செய்வதறியாது நின்றிருந்த பிரபாகரனை நோக்கி, குறிவைத்த பொலிஸ் அதிகாரி பூத்து பண்டாவைக் குறி தவறாது சுட்டு பிரபாகரனின் உயிரைக் காப்பாற்றினார். தலைவர் சிறி சபாரத்தினத்தின் விவேக நடவடிக்கையினாலேயே 81 இலட்ச ரூபா அபகரிக்கப்பட்ட இத் திட்டம் வெற்றிகரமாக முடிந்தது.

1981-ஏப்ரலில் தங்கத்துரை, குட்டிமணி ஆகியோர் சிறிலங்கா அரசினால் கைது செய்யப்பட்ட பின்னர் டெலோ (TELO) திறம்பட வழி நடத்தினார்.

1983 யூலையில் தங்கத்துரை குட்டிமணி, ஜெகன் மற்றும் டெலோ போராளிகள் படு கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து 'டெலோ' வின் தலைமைப் பொறுப்பை ஏற்றார். தனது விவேகத்தாலும் நிதானித்த நடவடிக்கைகளாலும் இயக்கத்தை பாரியளவில் கட்டி வளர்த்தார்.

1984 ஜன இல் இயக்க ஆதரவு தேடி இலண்டன். பிரான்சு, ஜெர்மனி ஆகிய ஐரோப்பிய நாடுகளிற்கு விஜயமொன்றை மேற்கொண்டார்.

தமிழ் மக்களின் உண்மையான விடிவிற்கு இயக்கங்களின் ஒற்றுமை அவசியம் என உணர்ந்து 1984 ஏப்ரலில் EROS. EPRLF ஐயும் அணைத்து ஈழத் தேசிய விடுதலை முன்னணி (ENLF)யை உருவாக்கப் பாடுபட்டு வெற்றி கண்டார்.

LTTE யினர் இவரைக் கொல்ல இரு முறை முயன்றபோதும் அவர்களை மன்னித்து ஒற்றுமைக்கான அழைப்பினை முன் வைத்தார்,

1984 அக்டோபரில் தமிழ் ஈழத்திற்கு சென்று களத்து நிலைமைகளைப் பார்வையிட்டார், தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்திற்கே திரும்பு முனையாக அமைந்த சாவகச்சேரி பொலிஸ் நிலைய, கைதடி தாக்குதல்களை 20-11-84 இல் திட்டமிட்டு மேற்கொண்டனர்

1984 டிசம்பரில் சென்னை திரும்பிய இவர் 1985 ஜன 19 இல் நிகழ்ந்த அடுத்த திருப்பு முனையான 298 இராணுவ வெறியரைக் கொன்றொழித்த முறிகண்டி ரெயில் தாக்குதலை இங்கிருந்தே திட்டமிட்டு நிகழ்த்தி சர்வதேச ரீதியில் போராட்டத்துக்கு ஆதரவு தேடினார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தன்னை கொல்ல வந்தவர்களையும் மன்னித்து 1985 ஏப்ரலில் LTTE ஐயும் ENLF இல் இணைத்துக் கொண்டார்.

1986 ஜன 18 இல் மீண்டும் தமிழ் ஈழத்திற்குச் சென்று சிறிலங்கா இனவெறியரசின் குண்டு வீச்சு விமானத்தாக்குதல்களினூடு மக்களோடு மக்களாக களத்தில் நின்று போராடினார்.

1986 மே 6 இல் நன்றி மறந்த துரோகி பிரபாகரனின் வெறியினால் கோண்டாவில் எனுமிடத்தில் திட்டமிட்ட சதித்திட்டத்திற்கு பலியாகி 28 துப்பாக்கி ரவைகளினால் சுடப்பட்டு வீர மரணமடைந்தார்.

அன்னாரின் மரணத்தை யொட்டி தமிழினம் தன் சிரம தாழ்த்தி அஞ்சலியை செலுத்தும் அதே வேளையில் அவர் விட்டுச் சென்ற பாதையில் நாம் தமிழ் ஈழ இலட்சியத்தை அடைவோமென உறுதி கூறுகிறோம்.

---

**இப்பிரசுரம் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் பிரச்சார பிரிவினால் 18-5-1986 அன்று சென்னை பெரியார் திடலில் இடம்பெற்ற அன்னாரின் படத் திறப்பு விழாவின் போது வெளியிடப்பட்டது.**

இறந்த 'டெலோ' வீரர்களுக்கு

# யாழ். நகரில் கடையடைத்து அஞ்சலி! ஈ.பி.ஆர் எல்.எப். ஏற்பாட்டில் நடந்தது

## வன்செயலை பிரயோகிக்கு மற்றொரு இளைஞர் கோஷ்டி எதிர்ப்பு

(யாழ். அலுவலக நிருபர்)

மறைந்த 'டெலோ' இயக்கத் தலைவர் ஸ்ரீ சபாரத்தினத்துக்கும் ஏனைய தோழர்களுக்கும் அஞ்சலி செலுத்துமுகமாக நேற்று யாழ்ப்பாணத்தில் கடைகள் மூடப்பட்டு துக்கம் அனுட்டிக்கப்பட்டது.

இதனால் வீதிகளில் மக்களின் நடமாட்டமும் குறைந்து காணப்பட்டது. ஸ்ரீ சபாரத்தினத்துக்கும் ஏனைய தோழர்களுக்கும் அஞ்சலி செலுத்துவதற்காக பூரண ஹர்த்தாலை அனுட்டிக்குமாறு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எப்.) வேண்டுகோள் விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இதனால் நேற்று யாழ்நகரிலும் சுற்றுப் பிரதேசங்களிலும் கடைகள் மூடப்பட்டிருந்தன. எனினும் இ. போ. ச. பஸ் சேவைகள் உட்பட தனியார் பஸ் சேவைகளும் ஓரளவு நடைபெற்றன.

பாடசாலைகளிலும், அரசாங்க அலுவலகங்களிலும் வரவு மிகவும் குறைவாகவே காணப்பட்டது.

வீரகேசரி
10-5-86



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நடந்துமுடிந்த சம்பவங்கள் ஈழப் போராட்டத்தில் அழியாத கறை

## ஈ. பி. ஆர். எல். எப். அறிக்கை

(யாழ். அலுவலக நிருபர்)

'ஈழப் போராட்டத்தில் மக்கள் விரோத செயற்பாடுகள் நிறுத்தப்படல் வேண்டும். அங்கு சமாதானமும் ஐக்கியமும் பேணப்பட்டால் மட்டுமே எதிரிக்கு எதிரான எமது யுத்தம் தீவிரமடையும்..

இவ்வாறு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எப்.) யாழ்ப்பாணத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'டெலோ' இயக்கத் தலைவர் ஸ்ரீ சபாரத்தினமும் அவரது தோழர்களும் கொல்லப்பட்டதற்கு கண்டனம் தெரிவிக்கும் முகமாக நேற்று முழு நாளும் யாழ். குடாநாட்டில் ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு வேண்டுகோள் விடுத்த மேற்படி தீவிரவாத இயக்கம் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

'நடந்து முடிந்த சம்பவங்கள் தொடர்பாக அவற்றுக்கான உண்மைக் காரணங்களை விளக்கி சம்பந்தப்பட்ட எவரும் உத்தியோக பூர்வமாக எந்தவித விளக்கமும் இதுவரை முன்வைக்கவில்லை.

நேர்மையான, நியாயமான காரணங்கள் ஏதும் இருப்பின் சம்பந்தப்பட்டவர்கள் அதனைப் பகிரங்கமாக முன்வைக்க வேண்டும். ஈழப் போராட்டத்தில் விடப்பட்ட தவறுகள் திருத்தப்படுவதும் தவறான தலைமைகள் தூக்கி எறியப்பட வேண்டியதும் அவசியமாகும். ஆனால் இதற்கான அணுகுமுறை என்ன?

தவறுகளை சுட்டிக் காட்டவும் விடுதலைத் தாபனங்களை சுட்டிக் கேட்கவும் பகிரங்கமாக விமர்சனம் செய்யவும் போதுமான அடிப்படை ஜனநாயக உரிமைகளை வெகுஜன ஸ்தாபனங்களுக்கு வழங்கி மக்கள் விரோத சக்திகளை மக்களைக் கொண்டே தூக்கியெறிவதே சரியான அணுகுமுறையும் ஜனநாயக ரீதியில் அமைந்த நடவடிக்கையுமாகும்.

கடந்த ஒன்பது தினங்களாக நடந்து முடிந்த சம்பவங்கள் ஈழப்போராட்ட வரலாற்றில் என்றும் அழியாத இரத்தக்கறையை ஏற்படுத்தியுள்ளது. இது வரையும் போராளிகளின் தியாகத்தால் அவர்கள் சிந்திய இரத்தத்தால் பெருமையடைந்த எங்கள் மண் இன்று போராளிகள் தமக்கிடையேயான முரண்பாட்டால் கொல்லப்பட்ட கோரச் சம்பவங்களால் கறைபடிந்துபோயுள்ளது.

வீரத்தால் விருப்படைந்த எங்கள் தேசத்துக்கென கருதப்பட்ட போராளிகளின் சடலங்களால் நசுக்கப்படுத்தப்பட்டுள்ளது. பெருமை பேசிக்கொண்டு பெற்ற வயிறுகள் பற்றி எரிகின்றன. மக்களிடையே அச்சமும் பீதியும் தலைதூக்கியுள்ளன. ஆனால் எதிரியோ தனது வேலை நம்மவராலேயே நடத்தப்படுவதனைக் குதித்துக் கூத்தாடுகின்றான். இந்த நிலைமையையிட்டு வெற்றிப் பெருமிதம்கொள்வது வெட்கக்கேடானது; வேடிக்கையானது.

ஈழப்போராட்டத்தில் மக்கள் விரோத செயற்பாடுகள் நிறுத்தப்படல் வேண்டும். ஈழத்தில் சமாதானமும் ஐக்கியமும் பேணப்படல் வேண்டும். அடிப்படை ஜனநாயக உரிமைகளை உத்தரவாதப்படுத்திக்கொள்ளவும் நாம் போராட வேண்டும்.

www.tamilarangam.net

# ஓலங்கள்

மனிதாபிமானிகளே !
நீங்கள் என்னைச் சிலிர்க்கமுடியாத அளவிற்கு
நான் ஜீவன் இழந்து விட்டேனா?
நான் ஓர் அநாதையா ?
எதிரியிடமிருந்து காணாமல் போன என்னை
மீட்கப் புறப்பட்டவர்களின் பாதங்களின்
கீழல்லவா நான் புதைகிறேன்.
புதைந்த எனக்கு புது வாழ்வேயில்லையா?
மறைந்த எனக்கு மறுவாழ்வுமில்லையா ?
ஓ மனிதர்களே தமிழர்களே !
என்னைக் காப்பாற்றுங்கள் !
புலம்புவது யாருமல்ல நான் தான்
மனிதாபிமானம்

மனச்சாட்சி வாதிகளே !
என் குடியிருப்பில் ஏன்
மௌனம் ஆட்சிக்கு வந்தது
நான் சாகாத வரம் பெற்றவன்
என்னை ஏன் அடிக்கடி
அடகு வைக்கிறீர்கள்
மௌனத்தின் ஒவ்வொரு விநாடி ஆட்சியும்
மக்களின் சுதந்திரக் கோவிலின்
மணிமுடியின் வீழ்ச்சி
எனக்கு என்வீடு பூரணமாக வேண்டும்

www.tamilarangam.net

அப்போதுதான் உங்களுக்கு நாடு தோன்றும்
உத்தரத்தில் நின்று உங்களுக்கு
உபதேசிப்பது யாருமல்ல
நான் தான் மனச்சாட்சி

விடுதலை விரும்பிகளே!
நான் நசுக்கப்படும் மக்களின்
மனதில் விளையும் பயிர்
தமிழன் நான் வாழ வளமுள்ள நிலமானேன்
வாழ்ந்தேன் வளர்ந்தேன்
அறுவடை காலத்திலா என்மீது
அராஜக நெருப்பிடுவது
நான் விடுதலையாய்ப் பூக்காமல் அழியமாட்டேன்
நான் வாழும் இதயங்களின் தொகையில்
இன்று ஏழையா?
இல்லை
நான் என்றுமே தமிழர்களிடையே வாழைதான்
எனக்கு கொஞ்சம் நிதானமெனும் நீரூற்றுங்கள்
உணர்வில் கொஞ்சம் உப்புச் சேருங்கள்
நான் தமிழீழம் பூக்கும்வரை வளர்வேன் வாழ்வேன்.
நான் தான் தமிழனின்
அழிவின் கரைக்கோடியில் ஏக்கத்தின் நுழைவாசலில்
தூக்கத்தின் எதிர்பரப்பில் மார்க்கத்தின் மணிமுடியில்
தோன்றும் நம்பிக்கை நட்சத்திரம்
நடுக்கடலில் தடுப்பிழந்த ஓடங்களில்
ஏங்கும் இதயங்களுக்கு துணிவு சொல்லும்
நான் யாரென்று கேட்கிறீர்களா?
சொல்கிறேன் நான் தான்
விடுதலையுணர்வு

www.tamilarangam.net

இரக்க வாதிகளே!

எதிரியிடம் இடமில்லாமல் உங்கள் இதயங்களில்
வாழ நினைத்தேன்
எனக்கு நானே சமாதி கட்டிக் கொண்டது
இப்போதுதான் புரிகிறது
என்னை கொலைசெய்து பிணத்தை காதலிக்க
எப்போது கற்றுக் கொண்டீர்கள்
போராளிகளின் இதயம் எனக்கு
இரத்தின மாளிகை என்றிருந்தேன்
என் மாளிகையே என்னை தொலைத்துவிட்டு
தடுமாறுகிறதா?
இல்லை தடுமாற்றப்பட்டதா ?
போராளிகளே என்னை உங்களிடம் வாழவிடுங்கள்
புகலிடம் கோருவது யாருமல்ல நான்தான்

இரக்கம்

ஆக்கம் - தமிழன்.

வூப்பெற்றல் வாழ் ஈழத் தமிழர்களால்
வெளியிடப்பட்டது.

மே. ஜேர்மனி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிந்தனை

தமிழ் மக்களின் இருள் சூழ்ந்த, நிச்சயமற்ற நிகழ் காலத்தில் தெளிவான சிந்தனை ஊடாக முறையான அரசியல் கோட்பாடுகளை ஆராய்ந்து திடமான பாதையில் செல்வதே நமது குறிக்கோளாகும். மேலும் உங்கள் கருத்துக்களையும், கட்டுரைகளையும் சிந்தனை வரவேற்கின்றது.

சுதந்திரமான கருத்துப் பரிமாறல்கள் மூலமே சிந்தனை உருவாகின்றது.

கடிதங்கள், கட்டுரைகள் மற்றும் சகல விடயங்களுக்கும் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி.

ஆசிரியர் குழு, Editors,
சிந்தனை SINTHANAI
ஒல்கா ஸ்ராஸா, 49 Olga str 49,
7 ஸ்ருட்காட் 1, 7-Stuttgart 1.
மேற்கு ஜேர்மனி. West Germany.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# முதலாளித்துவப் பொருளாதாரம்

நிலப்பிரபுத்துவப் பொருளாதார முறையின் பின் ஏற்பட்ட முதலாளித்துவப் பொருளாதாரம் விற்பனைக்காகவே பொருட்களை உற்பத்தி செய்யும் புதிய பொருளாதார உறவு முறைகளை ஏற்படுத்தியது. உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை சந்தையில் விற்பதனாலேயே முதலாளிகள் தொழிலாளர்களிடம் இருந்து சுரண்டப்பட்ட உபரி மதிப்பை (இலாபத்தை) தமது கைகளில் எடுக்கக்கூடியதாக இருந்தது.

தனியுடமையானது சட்டரீதியாக்கப்பட்டுள்ள முதலாளித்துவ சமுதாய அமைப்பில் முதலாளிகள் தமக்குச் சொந்தமாக உள்ள உற்பத்திச் சாதனங்கள் மூலமாகவே உற்பத்தி செய்கின்றனர். உற்பத்திக்குப் பாவிக்கும் மூலதனம், உற்பத்தி செய்யும் பொருட்களின் தொகை ஆகியவற்றை ஒவ்வொரு தனி முதலாளியும் தனது நலன் கருதியே தீர்மானிக்கின்றான். அந்த உற்பத்தியானது ஒரு வரையறையற்ற சந்தைக்காகவே செய்யப்படுவதனால் அந்தச்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சந்தையில் ஏற்படும் போட்டியின் தேவைகளே உற்பத்தியைக் கட்டுப்படுத்துகின்றது. ஒவ்வொரு முதலாளியும் சந்தையில் நடைபெறும் வியாபாரத்தில் பெரும் பகுதியைப் பெறுவதிலேயே கண்ணாக இருக்கின்றான். இதன் மூலமே அவன் தனது இலாபத்தைப் பெருக்க முடியும். சந்தையில் போட்டியிட்டு தனது இலாபத்தைப் பெருக்க முயலும் முதலாளியின் தீர்மானங்கள் அதே மாதிரிய மற்றைய முதலாளிகள் எடுக்கும் தீர்மானங்களால் தளர்ச்சியடை -வதில்லை.

இலாபத்தைப் பெருக்க தமது ஸ்தாபனங்களுக்குள் திட்டமிட்ட முறையில் முதலாளிகள் முயற்சி எடுக்கின்றனர். சந்தையில் பெறும் இலாபத்திற்கான போட்டியே முதலாளி வர்க்கத்தை அதற்கு முந்திய சொத்துரிமை படைத்த வர்க்கங்களிலிருந்தும் வேறு படுத்தியது. முன்னைய சமுதாய அமைப்புகளில் இருந்த ஆளும் வர்க்கங்கள் ஒடுக்கப்பட்ட மக்களிடமிருந்து சுரண்டிய சமூகத்தின் உபரி உற்பத்தியை முழுமையாக தமது நுகர்ச்சிக்காகவே பாவி -த்தனர். மாடமாளிகைகளைக் கட்டவும், பொன்னும் மணியும் பட்டும் அணியவும், விருந்துண்டு களிக்கவும் பாவித்தனர். அதுவே அவர்களை சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்தில் இருப்பவர்களாக காட்டக்கூடியதாகவும் இருந்தது. ஆனால் இந்த அடிமை மற்றும் நிலப்பிரபுத்துவ சமுதாய காலங்களில் நடைபெற்ற உற்பத்தி முறைகள் எவ்வித முன்னேற்றத்தையும் அடையவில்லை. மரக் கலப்பைகளும் நெசவுத் தறிகளும் ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு எவ்வித முன்னேற்றத்தையும் அடையவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சந்தையில் போட்டியிடும் முதலாளிகள் தமது பொருட்களின் விலைகளைக் குறைப்பதிலேயே போட்டியிட்டு வியாபாரத்தை அதிகரிக்க முடியும். ஆனால் ஒரு பொருளின் உற்பத்திச் செலவிலும் பார்க்க குறைந்த விலையில் எந்த முதலாளியும் விற்கமாட்டான். ஆகையினால் ஒரு பொருளின் உற்பத்திச் செலவைக் குறைப்பதன் மூலமே முதலாளிகள் தமது இலாபத்திற்குப் பங்கம் வராதமுறையில் பொருட்களின் விலைகளைக் குறைத்து சந்தையில் போட்டியிட முடிந்தது.

உற்பத்தியை அதிகமாக்குவதே உற்பத்திச் செலவைக் குறைப்பதற்கான கச்சிதமான முறையாகும். உற்பத்தி முறைகளை அபிவிருத்திசெய்து பொருட்களை அதிகமாக உற்பத்திசெய்வதன் மூலமே பொருட்களின் உற்பத்திச் செலவுகளை குறைக்கக்கூடியதாக இருந்தது. கைகளினால் செய்யப்பட்ட பொருட்கள் இயந்திரங்களினால் செய்யப்பட்டன. இயந்திரங்கள் மேலும் அதிநுட்பமானவையாக மாற்றப்பட்டன. போட்டியின் உந்துதலினால் உற்பத்தி முறைகள் மேலும் மேலும் நவீன மயப்படுத்தப்பட்டன.

இதற்கு அவசியமான மூலதனத்தை முதலாளிகள் தாம் தொழிலாளர்களிடம் இருந்து சுரண்டும் உபரி உழைப்பிலிருந்தே பெற்றுக்கொண்டனர். முன்னைய சமூக அமைப்பு முறைகளின்போது நடைபெற்றது போல் அல்லாமல், சுரண்டப்பட்ட உபரி உற்பத்தியை உற்பத்தி சாதனங்களை அபிவிருத்திசெய்யவும் பாவித்தனர். இதனால் உற்பத்திப் பெருக்கமும், உற்பத்திச்செலவில் சிக்கனமும் ஏற்பட்டது. இவ்வாறான நடவடிக்கைகளே முதலாளித்துவப் பொருளாதார



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அமைப்பை முன்னைய சமுதாய அமைப்பு முறைகளைக்காட்டிலும் முற்போக்கான பொருளாதார முறையாக உருவாக்கியது. இதன் விளைவாக மனிதசமுதாயத்தில் துரிதமான வளர்ச்சி ஏற்பட்டது. விஞ்ஞானக் கல்வி, போக்கு வரத்து சாதனங்கள், சமுதாய உறவு முறைகள் எல்லாமே பெரும் மாற்றத்துக்குள்ளாயின.

அதே சமயம் தொழில்கள் இயந்திரமயமாக்கப்பட்டமையால் மக்களும் இயந்திரங்களுக்கு அடிமைகளாகி விட்டார்கள். தொழிலாளர்களுக்கும் அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கும் இருந்து வந்த உறவுகள் அறுக்கப்பட்டு, அவர்கள் உற்பத்தி சாதனங்களிலிருந்தும் உற்பத்தி செய்யும் பொருட்களிலிருந்தும் அன்னியப்படுத்தப்பட்டு விட்டார்கள்.

உற்பத்திச்சாதனங்களின் உரிமையாளர்களாக இருக்கும் முதலாளிகள் தமது இலாபத்தைப் பெருக்க தொழிலாளர்களிடம் இருந்து தாம் சுரண்டும் உபரிமதிப்பை அதிகமாக்கவே முயலுகின்றனர். முதலாளித்துவம் வளர்ச்சியடையாத காலங்களிலும், அது வளர்ச்சியடையாத நாடுகளிலும் தொழிலாளர்களுக்கு உரிய கூலி கொடுக்காமல் வேலைநேரத்தை நீடிப்பதினாலும், கூலிக்குறைப்பினாலும் தமது இலாபத்தை அதிகரிக்க முயலுகின்றனர். முதலாளித்துவம் வளர்ச்சியடைந்த காலங்களில், அதுவளர்ச்சியடைந்துள்ள நாடுகளில் தொழிலாளர்களின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதன் மூலம் இலாபத்தை அடைகின்றனர். ஐந்து மணித்தியாலத்தில் உற்பத்தி செய்யும் பொருட்களை மூன்று மணித்தியாலத்தில் உற்பத்தி செய்யும் திறனினால் முதலாளிகளின் இலாபம் பன்மடங்காகப் பெருகுகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வளர்ச்சிக்கேற்ற கூலி உயர்வு இல்லை.

முதலாளித்துவ சமுதாயத்தில் தொழிற்சக்தி ஒரு விற்பனைப் பொருளாகிவிட்டது. கூலி என்பது தொழிற்சக்தியின் சந்தை விலையாகும். எவ்வாறு ஒரு பொருளின் விலையானது அப்பொருளை உற்பத்தி செய்யும் செலவை அண்டி நிற்குமோ அது போலவே ஒரு தொழிலாளிக்குக் கொடுக்கப்படும் கூலியும், அவனும் அவனுடைய குடும்பமும் உயிர்வாழ வாழவேண்டிய (தொழிற் சக்தியை உற்பத்தி செய்ய அவசியமான) வாழ்க்கைச் செலவுகளை அண்டியே இருக்கும்.

அதிக இலாபத்தைப் பெறும் போட்டியில் முதலாளிகள் உற்பத்திச் சாதனங்களை நவீன மயப்படுத்தும் பொருட்டு மேலதிக முதலீடுகளைச் செய்கின்றனர். ஆனால் அதே விகிதத்தில் தொழிலாளர்களின் கூலிகள் உயர்த்தப்படுவதில்லை. அவர்களின் வாழ்க்கைத்தரமும் உயருவதில்லை. இயந்திரமயப்படுத்தல் தனி முதலாளிகளின் நலன் கருதிச் செய்யப்படுவதால் பல தொழிலாளர்கள் வேலைகளை இழக்கின்றனர். வேலைஇல்லாமை அதிகரிப்பதால் முதலாளிகள் தொழிலாளர்களை குறைந்த கூலியில் வேலைக்கமர்த்த முயர்ச்சிக்கின்றனர். கடந்த 70 ஆண்டுகளில் அமெரிக்காவில் உற்பத்தி சாதனங்களுக்கான முதலீடுகள் 6 மடங்காகக அதிகரித்திருக்கையில் கூலியானது 2—3 மடங்காகவே உயர்ந்திருக்கின்றது.

பாட்டாளிகளின் தொகை அதிகரிக்கின்றது.

நவீனமயப்படுத்தப்படுத்தப்பட்ட உற்பத்தியினால் பொருட்கள் சந்தையில் நிறையும் பொழுது சிறிய தொழிலகங்கள் போட்டிபோட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முடியாமல் சீரழிந்து வங்குரோத்தடைகின்றன. பெரிய சுறாக்கள் சிறிய மீன்களை விழுங்கிவிடுகின்றன. இதனால் மூலதனம் மையப்படுத்தப்பட்டு பெரிய தொழில் ஸ்தாபனங்களில் குவிகின்றது. சிறு முதலாளிகள் வங்குரோத்தடைந்து தொழிலாள வர்க்கத்துடன் சேருகின்றார்கள். பலர் நம்புவது போல தொழிலில் ஈடுபடும் சிறு முதலாளிகள் எல்லோரும் பெரும் முதலாளிகளாக வருகின்றனர் என்பது யதார்த்தத்திற்கு ஒவ்வாததாகும். ஐக்கிய அமெரிக்காவில் 1880 இல் 36.9 % மாக இருந்த முதலாளிகளின் தொகை 1970 இல் 8.9 %மாகக் குறைந்து விட்டது. அதை விளக்கும் அட்டவணையைக் கீழே தருகின்றோம்.

ஐக்கிய அமெரிக்க நாடுகளில் ஏற்பட்ட வர்க்கங்களின் பரிணாமவளர்ச்சி (முழு சனத்தொகைக்குமான வீதம்).

| ஆண்டு. | கூலிஉழைப்பாளிகள். | முதலாளிகள். |
|---|---|---|
| 1880 | 62 % | 36.9 % |
| 1890 | 65 % | 33.8 % |
| 1900 | 67.9 % | 30.8 % |
| 1910 | 71.0 % | 26.3 % |
| 1920 | 73.9 % | 23.5 % |
| 1930 | 76.8 % | 20.3 % |
| 1940 | 78.2 % | 18.8 % |
| 1950 | 79.8 % | 17.1 % |
| 1960 | 84.2 % | 14.0 % |
| 1970 | 89.9 % | 8.9 % |

ஆதாரம்— "வர்க்க சமுதாயத்திலிருந்து கம்யூனிசத்திற்கு."
எழுதியவர்- ஏர்னஸ்ற் மன்டேல்.

www.tamilarangam.net

இந்தவிதமான வளர்ச்சியின் ஆரம்பத்தில் தனித்தனி ஸ்தாபனங்களாக விளங்கிய முதலாளித்துவ அமைப்புக்கள் உற்பத்தி வளர்ச்சியில் ஏற்பட்ட எளிமை, தரப்படுத்தல், தொழிற்பிரிவு ஆகியவற்றினால் ஒன்றில் ஒன்று தங்கியிருக்கும் தன்மையையும் பெற்றன. இது ஒருநாட்டில் மட்டுமல்லாமல் தேசங்களையும், கண்டங்களையும் இணைத்து விட்டதன் விளைவாக ஒரு உலகப் பொருளாதாரம் உருவாகியுள்ளது.

## முதலாளித்துவத்தின் முரண்பாடுகள்.

போட்டியின் அடிப்படையிலேயே முதலாளித்துவம் இயங்குகின்றது. திட்டமிட்ட முறையில் அமைக்கப்பட்டு இயங்கும் முதலாளித்துவ ஸ்தாபனங்களுக்கிடையில் எந்தவித திட்டத்திலும் அமையாத வியாபாரப் போட்டி நடைபெறுகின்றது. தனியுடமையாளர்களின் போட்டியில் "திட்டமிடல்" முடியாதகாரியமாகும்.

முதலாளித்துவ உற்பத்தியானது முழு சமுதாயத்தையும் பாதிக்கக் கூடிய முறையில் இன்று நடைபெறுகின்றது. ஒவ்வொரு மனிதனும் தன் அடிப்படைத் தேவைகளுக்கு அந்த உற்பத்தியில் தங்கியிருக்கின்றான். இயற்கைச் செல்வங்கள்—காடுகள், ஆறுகள், ஓடைகள் —எல்லாம் அழிக்கப்படுகின்றன. வழி மண்டலம் நச்சுப் புகைகளால் நிரப்பப் படுகின்றது. இந்தியாவில் "போபால்" ஒரு உதாரணம். ஆனால் முதலாளித்துவ உற்பத்தியானது ஒரு சிறு பகுதியினரின் நன்மைக்க-ாகவே நடைபெறுகின்றது. அமெரிக்கநாட்டின் முதலாளித்துவ இலாபங்களை சுமார் 9% மான அமெரிக்கர்களே அனுபவிக்கின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொழில் வளர்ச்சியில் இயந்திரங்களுக்காகவும் மூலப் பொருட்-களுக்காகவும் முதலீடுகள் அதிகரிக்கின்ற விகிதத்தில் தொழிலா-ளரின் கூலி அதிகரிப்பதில்லை. இதனால் முதலீடுகள் அதிகரிக்கும் விகிதத்தில், தொழிலாளர்களின் கூலியில் இருந்து சுரண்டப் படும் இலாபம்( உபரிமதிப்பு) அதிகரிப்பதில்லை. இலாபத்தை அதிகமாக்க-க் சுரண்டலைத் தீவிரமாக்க வேண்டியது அவசியமாகின்றது. உற்பத்தியை அதிகரிக்கும் முதலாளித்துவம் மக்களின் நுகர்ச்சிகளை வரையறுக்கும் விதத்தில் கூலிகளைக்குறைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றது.

மனிதசமுதாயம் முழுவதையும் ஒரு சுபீட்சமான வாழ்க்கு இட்டுச்செல்லக் கூடிய அளவுக்கு விஞ்ஞானம் வளர்ந்திருந்தும் அது தனிப்பட்ட முதலாளிகளின் இலாபத்தைப் பெருக்குவதற்காகவே பாவிக்கப்படுகின்றது. சந்திரனில் மனிதன் நடந்துகொண்டிருக்கின்ற வேளையில் பூமியில் மனிதன் பட்டினியால் வாடுகின்றான். சுரண்டுகின்ற முதலாளித்துவத்திடமிருந்து தனது உரிமைகளையும் உடமைகளையும் வென்றெடுக்க தொழிலாள வர்க்கம் நடத்தும் வர்க்கப் போராட்டம் இவ் முரண்பாடுகளுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல அமைகின்றது.

முதலாளித்துவப் பொருளாதாரத்தில் ஏற்படும் குழப்ப நிலை.

இந்த முரண்பாடுகள் முதலாளித்துவ சமுதாயத்தில் காலத்திற்கு காலம் பெரும் குழப்பங்களாக வெடிக்கின்றது. இதைப் பொருளியல் நிபுணர்கள் மிதமான உற்பத்தியினால் ஏற்படும் குழப்பங்கள் எனக் கூறுகின்றனர். முதலாளித்துவம் செழுமைக் காலங்களில் அதிகமான பொருட்களைச் சந்தையில் குவிக்கின்றது. ஆனால் உற்பத்திக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

சிறு கதை.

# அவன் சிரித்தான்......

அவர்கள் வருவார்கள், ஒரு மாலை வேளையில்.

எனக்கு நல்லாக ஞாபகம் இருக்கிறது.

அப்பொழுது வானம் எல்லாம் சிகப்பாக இருக்கும்.

அச்செவ்வானம் பார்வதிதேவியை எனக்கு நினைவூறுத்தும்.

எனக்குக் கொஞ்சம் ஞாபகம் இருக்கிறது. அவர்களுடைய சட்டைகள் பச்சையாய் இருக்கும். சட்டைப்பைகளில் ஏதோ எழுதியிருக்கும், பொத்தான்கள் குத்தப்பட்டிருக்கும். ஒரே சீராக ஒலிக்கும் சப்பாத்து ஒலிகள்.......

எனக்கு நன்றாக ஞாபகமிருக்கின்றது.

அவர்களுடன் என் அண்ணும் இருந்தான். ஒரு முறை அண்ணு வந்திருந்த போது அம்மா அழுதாள். "எப்போது நீ வீட்டுக்கு வருவாய்" என்று கேட்டு அழுதாள்.

அவன் சிரித்தான்.

பின்பு சொல்லுவான் "இனவெறி மேகங்கள் இடிக்கப்பட்டவுடன், அமெரிக்க ஏகாதிபத்தியம் முறிக்கப்பட்டவுடன்..."

அவன் மீண்டும் சிரிப்பான். அம்மா அவனுடைய கையைப் முகத்தில் ஒத்தியபடியே அழுதாள்.

•  •  •  •

அண்ணு பல புத்தகங்கள் வைத்திருந்தான், பாரதியார் பாடல்கள் அவனுக்கு நன்றாகப் பிடிக்கும். அவன் பாடுவான், "மாகாளி பராசக்தி உருசிய நாட்டில் கடைக் கண் வைத்தாள்...." என்று. அப்புறம் அங்கு என்ன நடந்தது என்று கேட்பேன்.

www.tamilarangam.net

அவன் சிரிப்பான்.

பிறகு அவன் போய்விட்டான். அம்மா மட்டும் அழுது கொண்டிருந்தாள்.

சில மாதங்கள் கழிந்தன, அண்ணாவிடம் இருந்து கடிதமோ தகவலோ வரவில்லை. அவர்களுடைய குழு குலைந்து விட்டது என்று தகவல் வந்தது. எனது அயல் வீட்டுக்காரன் கூறினன். ஏன் என்று கேட்டேன். அவனுக்குப் பதில் தெரியவில்லை.

சில வாரங்கள் கழிந்தன. அண்ணா மீண்டும் வீட்டிற்கு வந்தான். அம்மா ஓடிச்சென்று அவனை அணைத்துக் கொண்டாள். அம்மா வழமை போல் கேட்டாள், "எப்படா நீ எங்களுடன் நிரந்தரமாக வந்து வாழப்போகிறாய்....". ஆனால் அவன் வழமை போல் சிரிக்கவில்லை. ஒன்றும் சொல்லவும் இல்லை. ஒரு மூலையில் போய் இருந்து கொண்டு விம்மி விம்மி அழுதான். எனக்கு இன்றும் ஞாபகம் இருக்கின்றது. அவனது இரு கண்ணீர் துளிகள் நிலத்தில் விழுந்து தெறித்தன.

அவன் சென்றுவிட்டான். இரண்டு மாதங்களுக்கு அவர்களது குழுவைப்பற்றிய எந்தத் தகவலும் வரவில்லை.

ஒரு நாள் எனது நண்பன் தகவல் கொண்டு வந்தான். அண்ணாவின் குழு எங்கள் கிராமத்திலும் அடுத்த கிராமங்களிலும் கூட்டங்கள் வைக்கின்றார்கள் என்று கூறினன். அண்ணாவுடன் பேசினதாகக் கூறினன். என்ன பேசினன் என்று நான் வினவினேன். நண்பன் கூறினன், "இப்பொழுதுதான் அவன் கூறுவதை விளங்கிக் கொள்ள முடிகின்றது." நான் மேலே கேட்கவில்லை.

www.tamilarangam.net

• • • •

ஒரு நாள் அதிகாலையில் கிழக்கு வெளுக்கும் நேரத்தில் தெருவெல்லாம் ஒரே ஆரவாரமாக இருந்தது. நான் வாசலுக்குச் சென்று பார்த்தேன். மக்கள் திரள் திரளாகச் சென்று கொண்டிருந்தார்கள். வீட்டிற்கு ஓடி வந்து அம்மாவைத் தேடினேன். அம்மாவைக் காணவில்லை. மீண்டும் தெருவுக்கு ஓடினேன்... மக்கள் கூட்டம் சென்று கொண்டிருந்தது. எனது நண்பர்கள் என்னையும் வரும்படி அழைத்தார்கள். நான் சுற்றும் முற்றும் பார்த்தேன். என்ன ஆச்சரியம். அம்மாவும் அவர்களுடன் சென்று கொண்டிருந்தாள். மகிழ்ச்சியுடன் ஊர்வலத்தில் நடக்கத்தொடங்கினேன். ஊர்வலம். எவ்வளவு பெரிய ஊர்வலம். ஆச்சரியப்பட்டுக் கொண்டு நடந்தேன். சென்று கொண்டிருந்த மக்கள் கூட்ட-த்தில் ஏதோ ஒரு ஆவேசம், மகிழ்ச்சி, ஆவல் எல்லாம் நிறைந்திருந்தன. திடீர் என யாரோ எனது கன்னிர-ண்டையும் பொத்தினார்கள். திரும்பிப்பார்தேன். அண்ணு சிரித்தபடி நின்று கொண்டிருந்தான். அம்மா எப்பொழுதும் கேட்கும் கேள்விக்கு அவன் என்னிடம் பதில் கூறினான்.

"நான் இனி நிரந்தரமாக உங்களுடன் வாழ்வேன்"

மக்கள் கோசமிட்டுக்கொண்டு சென்றார்கள். அவன் பாடினான்.

"வீரமாகாளி பராசக்தி வெகுண்டெழுந்தாள்
ஈழநாட்டில் கடைக் கண் வைத்தாள்
ஆகாவென்று எழுந்தது பார் யுகப் புரட்சி.."

வீரமாகாளி அம்மன் கோவில் மணி ஒலித்துக் கொண்டிருந்தது. அவன் சிரித்துக்கொண்டே மக்களுடன் சென்றுகொண்டிருந்தான்.

ஆக்கம் - ஜெயன்

www.tamilarangam.net

உங்களுடன் சில வார்த்தைகள்...........

**சிந்தனை** இதழ்களை ஒழுங்காக வெளிக் கொண்டு வருவதற்கு இடையூறாக இருப்பது சாதாரணமாக இத்தகைய பத்திரிகைகளுக்கு ஏற்படும் நிதிநெருக்கடியே -யாகும். தாங்கள் பெறும் இதழுக்குரிய *பணத்தைச் செலுத்துவதன் மூலமும், ஆறு இதழ்களுக்கான வருட சந்தா 20 டி.எம். எமக்கு அனுப்புவதன் மூலமும் நீங்கள் இந்த நிதி நெருக்கடியைப் போக்கி **சிந்தனை** யை ஒழுங்காக வெளிவர உதவி செய்யலாம்.

இலங்கையிலும் இந்தியாவிலும் உள்ள தோழர்களுக்கு எமது பத்திரிகைகளை இலவசமாகவே அனுப்புகின்றோம். எமது பத்திரிகையைப் பெற விரும்பும் மற்றைய தோழர்களின் முகவரிகளை எமக்கு அறிவிப்பதன் மூலமும், தங்களிடமுள்ள பத்திரிகைகளையும், பத்திரிகை நறுக்குகளையும் எமக்கு அனுப்புவதன்மூலமும் நீங்கள் எமக்கு உதவலாம்.

மேற்கு ஐரோப்பிய நாடுகளில் உள்ள தோழர்கள் நிதி மற்றும் வருடசந்தா( 20 டி.எம்) அனுப்ப வேண்டிய

முகவரி--

P.Kumarasamy,
c/o. SINTHANAI,
Olga str 49,
7- Stuttgart 1.

* குறிப்பு: தனிப் பிரதிக்கான அன்பளிப்பு 3.50 டி.எம் ஐ தபால் முத்திரைகள் மூலமாகவும் அனுப்பலாம்.

ஆசிரியர் குழு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மேற்கு ஜேர்மனி - ஸ்ருட்காட் (STUTTGART)
நகரில் இயங்கி வரும் இலங்கைத் தமிழ்
மகளிர் மன்றத்தினர் கடந்த மே-17ம் திகதி
நகரின் மத்தியில் ஒரு தகவல் நிலையத்தினை
நடத்தினர்.

இலங்கையில் தமிழ்மக்களுக்கெதிராக நடை-
பெறும் அரச வன்முறைகள் பற்றிய 3000
துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.
தென் ஆசிய நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட
பிரசுரங்கள் விற்பனை செய்யப்பட்டன.

தமிழ் மகளிர் சுயமாக இயங்கி நடாத்திய
இந்தத் தகவல் நிலையம் பலரின் பாராட்டுதல்-
களைப் பெற்றது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தினமணி - 15-

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவரான பிரபாகரன் வேறுப்பின்னை

ஏனைய பிரிவினைவாத கெரில் லாக் குழுக்களின் தலைவர்களை ஒழித்துக்கட்ட திட்டம் தீட்டி

யுள்ளாரென ஆயுதப்படை யினரிடம் பிடிபட்ட ஜெயராஞ் சன் என்பவர் கூறியுள்ளதாக ...நேற்றுத் தெரி

# சிந்தனை

# விடு...

# இயக்...

## புலிகள்

(யாழ். அலுவலக நிருபர்)

விடுதலைப் பாதையிலிருந்து விலகிச் செல்லும் இயக்கங் களை தடைசெய்வதென்ற தமி ழீழ விடுதலைப் புலிகள் இயக் கத்தின் கொள்கைக்கு அமை யவே இப்பொழுது "டெலோ" இயக்கத்தையும் தடைசெய்கிறோம் ... விடு தலைப் புலிகள் ... யாழ். மாவட்... கிட்டு அறி... டெலோ... அழிக்க வி... இயக்க குழு... போது பொ... அவர்களை எ...

தேசிய ...மான 'லங்கா ...ட ஆங்கிலச் ...ழாக்கம் வரு

...சகல பிரிவினைவாதக் ...க்களின் தலைமையை ...க்க பிரபாகரன் மிகக் ...மாகப் போராடுகிறார். ...லும் அவருக்கு நிதிப் பத் ...றை இருந்து வருகிறது" ...று வல்வெட்டித்துறை, யாழ் ...த்தைச் சேர்ந்த ஜெயராஞ் என்பவர் தெரிவித்துள்

...மிழீழ விடுதலை இராணுவ ...லோ) அங்கத்தவர்களாவ ...ரம், தேவன் ஆகியோர ...ழீழ விடுதலை ...ர்ந்த ஜெயன் கொலையுண்ட ...பிரபாகரனே ...தமிழீழ ...தலைக் ...மகேஸ் ...வர்





### பெட்ரோல் ஊற்றி எரிப்பு

திண்ணைவெலி, மல்லாகம், சா வகச்சேரி, நல்லாரம், தெல்லி பாளை ஆகிய இடங்களில் 'டெ லோ' உறுப்பினர்கள் (இவர்க ளில் சிலர் 13 அல்லது 14 வயதுடையவர்கள்) பெட்ரோல் ஊற்றி உயிருடன் கொளுத்தப் பட்டனர். இதுபற்றி யாழ்ப்பா ணத்தில் வசிக்கும் ஒருவர் கூறு கையில் "1983 ஜூலை கலவரங்க ளின்போது கொழும்பு வீதிகளில் தமிழர்களை சிங்களவர்கள் உயிரு டன் கொளுத்தினார்கள். அதே செயலை இப்போது செய்துள்ள போராளிகள் அவர்களைவிட எவ் விதத்தில் மேம்பட்டவர்கள்?"

...லைகளுக்குள்ளும், பல்கலைக்கழக வளாகத்திற்குள்ளும் நுழைந்த னர். பாதுகாப்புப் படையினர் இவ்வாறு நுழைந்தபோது ஆட் சேபித்த விடுதலைப் புலிகள் இப் போது அதே காரியத்தை எவ் வாறு செய்யலாம் என்று அந்த யாழ்ப்பாண வாசி கூறினார்.

### எதிர்ப்பு தெரிவிக்காத "டெலோ"

தமிழர் சகோதரர்களை கொல்ல மனம் வராததால் "டெ லோ" உறுப்பினர்கள் விடுதலைப் புலிகளை எதிர்க்கவில்லை என யாழ்ப்பாணத்தில் வசிக்கும் சிலர் கூறினர். சில இடங்களில் கும்பிட்ட கைகளுடன் சரண டைந்த சிறுவர்கள் வெறித்தன மாக சுட்டுக் கொல்லப்பட்டனர்.

...ரல் 29லிருந்து மூன்று ...கு-இந்தப் படுகொலை ...தது. இதனால் மக்களி... பட்ட கோபம் காரண... என்னவோ, சபார... மறைவுக்கு இரங்கல் ... வெள்ளி அன்று யா... தில் 'ஹர்த்தால்' ... முழு அளவுக்கு நடந்... ரட்சி விடுதலை முன்ன... ஹர்த்தாலுக்கு ஏற்பா... ருந்தது. ஹர்த்தாலின்... கொண்டால் அடுத்த ... னுவத்தினர் வரும்பே... காப்பு அளிக்க இய... வியாபாரிகளுக்கும், ...மையாளர்களுக்கும் புலிகள் எச்சரிக்கை ... தும். பெரும் ஆதரவு... ஹர்த்தால் நடந்தது ...